
# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்


**கணிதம் - தரம் 5 / இரண்டாந் தவணை – வாரம் 13**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

**<u>14.2 : நேரம் – நேரம் கழிதல் தொடர்பான கணித்தல்களாகக் கொண்ட பிரசினங்களைத் தீர்ப்பார்.</u>**

I. 12 மணித்தியாலக் கடிகாரத்திலும் 24 மணித்தியாலக் கடிகாரத்திலும் நேரத்தை வாசித்தலை நினைவூட்டுக.




**<u>மனனம் செய்து கூற வழிப்படுத்துங்கள்.</u>**


- 60 செக்கன் - 1நிமிடம்
- 60 நிமிடம் - 1 மணித்தியாலம்
- 24 மணித்தியாலம் - 1 நாள்
- 7 நாள் - 1 வாரம்
- 4 வாரம் - 1 மாதம்
- 12 மாதம் - 1 வருடம்
- 52 வாரம் - 1 வருடம்

II. கீழ் தரப்பட்டிருக்கும் காலம் தொடர்பான அறிவூட்டல்களை வழுங்குக.


- நாள் ஒன்றில் 24 மணித்தியாலங்கள் உள்ளன.
- கடிகாரம் 12 மணித்தியாலங்களை மட்டுமே காட்டுகிறது.
- நாள் ஒன்றில் 24 மணித்தியாலங்கள் கொண்ட இரு பகுதிகள் முற்பகல் பிற்பகல் என பிரிக்கப்பட்டுள்ளது.
- 0 - 24 வரை நேரத்தை நியம நேரம் என்போம்.
- நாள் ஒன்று ஆரம்பமாகும் நேரம் நள்ளிரவு 12 மணி = 00 00 மணியாகும்.

III. செலவிடப்பட்ட நேரத்தைக் காண்போம்.

1). சரவணன் மு.ப 6.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 7.25 மணிக்குப் பாடசாலை அடைந்தான். அவனுக்கு பாடசாலை செல்வதற்கு செலவான காலம் எவ்வளவு?



புறப்பட்ட நேரம்



பயணம் முடிந்த நேரம்.

| | | மணி | | நிமிடம் |
|---|---|---|---|---|
| பயணத்தை முடித்த நேரம் | - | 7 | . | 25 |
| பயணத்தை ஆரம்பித்த நேரம் | - | 6 | . | 30 |
| செலவான காலம் | - | 0 | . | 55 |

2). பேருந்தொன்று மு.ப 10.15இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்டுப் பி.ப 1.00 இற்கு காலி நகரை வந்தடைத்தது. அப்பயணத்திற்குச் செலவான காலம் எவ்வளவு? ...........................

3). பாடசாலையில் கற்பித்தல் ஆரம்பிக்கும் நேரம் மு.ப 8.00 மணியாகும். இடைவேளை ஆரம்பமாகும் நேரம் மு.ப 10.00 மணியாகும். கற்பித்தலுக்கு செலவான காலம் எவ்வளவு? ....................................

4). குமார் பி.ப 2.30 மணிக்கு வீட்டிற்குச் சென்று பி.ப 4.00 மணிவரை மேலதிக வகுப்பில் கற்றான். அவனுக்கு வகுப்பில் செலவழிந்த காலம் எவ்வளவு? ........................................

5). சந்திரன் பி.ப 5.15 மணி தொடக்கம் பி.ப 7.00 மணிவரை வீட்டு வேலை செய்தான். வீட்டு வேலை செய்ய செலவழிந்த காலம் ?............................

6). மாலா பி.ப 8.00 மணிக்கு இரவு உணவு உண்டான். பி.ப 9.15 மணிவரை படித்தான். படிப்பதற்கு செலவழிந்த காலம் எவ்வளவு? ....................................

IV. குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிந்த நேரத்தைக் காண்போம்.

1). கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பேருந்து ஒன்று மு.ப 9.00 மணிக்குக் கொழும்பிலிருந்து புறப்பட்டு 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களில் திருகோணமலையைச் சென்றடைந்தது. சென்ற நேரம் யாது?

| | | மணி | | நிமிடம் |
|---|---|---|---|---|
| புறப்பட்ட நேரம் | - | 9 | . | 00 |
| செலவழிந்த காலம் | - | 7 | . | 45 |
| சென்றடைந்த நேரம் | - | 16 | . | 45 |

(24 மணி கடிகாரத்தில் 16 குறிப்பது பி.ப 4 மணி ஆகும்.எனவே சென்றடைந்த நேரம் பி.ப 4.45 ஆகும்.)

2). கண்காட்சி ஆரம்பமாகிய நேரம் பி.ப 6.30 ஆகும். 2 மணித்தியாலம் 35 நிமிடங்களில் பார்வையிட்டு முடிக்கப்பட்டது. எனின் கண்காட்சி முடிந்த நேரம் யாது? .........................

3). மகரகமயிலிருந்து பி.ப 11.30ற்கு பயணித்தை ஆரம்பித்த பேருந்து சுமார் 1 மணித்தியாலம் 45 நிமிடங்களில் மாத்தறையை சென்றடைந்தது எனின் பயணத்தை முடித்த நேரம் யாது? .........................................

V. குறிப்பிட்ட ஒரு வேலை ஆரம்பித்த நேரத்தைக் கணிப்போம்.

1). ஐந்தாந்தர மாணவரின் கலை நிகழ்ச்சிகளுக்கு 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள் செலவாகியது. பி.ப 6 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் முடிவடைந்ததாயின் அது ஆரம்பிக்கப்பட்ட நேரம் யாது?

| | மணி | | நிமிடம் |
|---|---|---|---|
| | 18 | . | 00 |
| - | 3 | . | 30 |
| | 14 | . | 30 |

(24 மணிக் கடிகார நேரமாக மாற்றுதல் – 14.30 = பி.ப 2.30 )

2). பிள்ளை ஒன்று பி.ப 3.00 மணிக்குப் புத்தகமொன்றை வாசிக்க ஆரம்பித்து பி.ப 4.15 மணிக்கு முடித்தது. எனின் புத்தகத்தை வாசிப்பதற்கு செலவாகிய நேரம் எவ்வளவு?

..............................

3). மு.ப 6.15 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட சாரதா 45 நிமிடங்களில் பாடசாலையை வந்தடைதாள். பாடசாலையை வந்தடைந்த நேரம் யாது? ...............................

❖ பாடநூல் பக்கம் 111, 112, 113, 114,115 பயிற்சிகளை செய்வதற்கு வழிப்படுத்துக.